பயனீட்டாளர்களைத் தொழில்முனைவர்களாக மாற்றும் திட்டத்துடன்

## ஜி.எம்.கிளாங் மொத்தவிலை விற்பனை மையத்தின்

# எளிய முறை விவேகச் செயலி அறிமுகம்

(கே.வி.சுதன்) கிள்ளான், அக்.28-

தென்கிழக்காசியாவிலேயே மொத்த விலை வர்த்தக மையமாக பரந்து விரிந்து உறுதியுடன் வலிமை பெற்றுத் திகழும் ஜி.எம்.கிளாங் அதன் வர்த்தக நடவடிக்கையின் தொடர் மேம்பாட்டிற்காக எளிய முறை விவேகச் செயலி ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. இதன் தொடர்பான அறிமுக விழாவை சிலாங்கூர் மாநில வீட மைப்பு, நகர்புற நல்வாழ்வு, தொழில்முனைவர் மேம்பாட்டுத்துறை ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்ஸியா இஸ்மாயில் அதிகாரப்பூர்வமாகத் தொடக்கி வைத்தார்.



ஜி.எம்.கிளாங் வர்த்தக மையத்தின் கூட்ட அறையில் நடைபெற்ற மேற்றண்ட அறிமுக விழாவைத் தொடர்ந்து அதிகமான இளைஞர்களைக் கவர்ந்திழுத்து அவர்களைத் தொழில் முனைவர்களாக மாற்றியமைக்கும் பயன்மிக்கத் திட்டங்கள் செயலாக்கம் கண்டு வருவதாக அம்மையத்தின் நிர்வாக இயக்குநரான டத்தோ லிம் செங் கோக் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இச்செயலியின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக பயனீட்டாளர்கள் அவர்கள் பொருட்களைக் கொள்முதல் செய்யும் நடவடிக்கைக்குப் பின் அதன் தொடர்பான வர்த்தகத்துடன் ஈடுகொடுக்கத்தக்க நிகரான, இயல்பான செயல்பாட்டிற்குரிய திறனைக் கொண்டுள்ளதாக அமைந்துள்ளது. இதன் தொடர்பில் வியாபாரம் செய்ய ஆர்வம் கொண்டுள்ள சம்பந்தப்பட்ட பயனீட்டாளர்கள் இந்நிறுவனத்துடனான நேர்முகப் பேட்டிக்குத் தயார் நிலைப்படுத்தும் வகையில் அதற்கான நாள், நேரம், வர்த்தகத்திற்கான பொருள் குறித்த தகவல்கள் போன்றவற்றைப் பூர்த்தி செய்து பதிவிறக்கம் செய்த பின் தொடர்ந்து ஜி.எம். கிளாங் நிறுவனத் தரப்பினர் அப்பயனீட்டாளருக்குத் தேவைப்படும் பொருட்களை விநியோகம் செய்யும் மொத்த வியாபாரியை நேரடியாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தும் ஏற்பாட்டையும் செய்து தருவர். மேலும் சம்பந்தப்பட்ட பயனீட்டாளர் தான் கொள்முதல் செய்த பொருட்களை வலைத்தளங்களின் மூலம் நேரடி ஒளிபரப்பாக பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்தும் வசதியுடன் கூடிய பிரத்தியேக வர்த்தகக் கூடமொன்றும் ஏற்படுத்தித் தரப்படும், என்று ஜி.எம். நிறுவன வர்த்தகப் பொருட்கள் சம்பந்தப்பட்ட பொது வுறவு அதிகாரியுமான நோர்ஸுஹாய்டா ஒத்மான் விவரித்தார்.




**புதிய செயலி அறிமுக விழாவை அதிகாரப்பூர்வ மாகத் தொடக்கி வைத்த ரோட்ஸியா இஸ்மாயிலுடன் ஜி.எம்.கிளாங் ஏற்பாட்டுக் குழுவினர்.**

இச்செயலியை கூகுள் பிலே ஸ்டோர் (Google Play Store), ஏப்பல் எப் ஸ்டோர் (Apple App Store) ஆகியவற்றின் மூலம் பதிவிறக்கம் செய்து GMKAPPLAUNCH எனும் சிறப்பு எழுத்துக்களை உட்படுத்திப் பதியும் முதல் 1000 வாடிக்கையாளர்களுக்கு 5 ரிங்கிட் மதிப்புக்கு உட்பட்ட உணவு, குடிநீர் பானம் போன்றவற்றை வாங்கிப் பயன் பெறும் பற்றுச் சீட்டுகள் இலவசமாக வழங்கப்படும். இதைத் தவிர்த்து, இம்மையத்தில் நடைபெறும் புதிய கடைத் திறப்பு, வியாபாரப் பிரச்சார நடவடிக்கைகள் உள்ளிட்ட இதர தகவல்கள் Aplikasi Komuniti Bisnes GM Klang எனும் செயலியின் மூலம் தெரிவிக்கப்படும். மேல், விவரங்களுக்கு ஜி.எம்.கிளாங் வர்த்தகப் பொருள் விற்பனை செயல்திட்ட அதிகாரியான Nurhani Yasmeen Binti Mohd Zainan, என்பவரை 012-2851152, அல்லது yasmeengmklang.com போன்றவற்றின் வாயிலாகத் தொடர்பு கொள்ளலாம்.

